## மார்ச் - 07 - புதன்

### தூய பெர்ப்பெத்துவா

### “நாட்டில் அவற்றைப் பின்பற்ற வேண்டும். இச:4:5

**முதல் வாசகம் : இணைச்சட்டம் 4 : 1,5 – 9**

இப்பொழுது இஸ்ரயேலரே! கேளுங்கள் நான் உங்களுக்குக் கற்றுத்தரும் நியமங்கள் முறைமைகளின்படி ஒழுகுங்கள். அதனால் நீங்கள் வாழ்ந்து, உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கொடுக்கும் நாட்டுக்குச் சென்று அதை உரிமையாக்குவீர்கள். நம் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைப்படியே நியமங்களையும் முறைமைகளையும் உங்களுக்குக் கற்றுத் தருகிறேன். எனவே, நீங்கள் போய் உரிமையாக்கிக் கொள்ளும் நாட்டில் அவற்றைப் பின்பற்ற வேண்டும். நீங்கள் அவற்றைப் பின்பற்றி நடங்கள். அதுவே மக்களினங்கள் முன்னிலையில் உங்கள் ஞானமும் அறிவாற்றலுமாய் விளங்கும். இந்த நியமங்களைக் கேள்வியுறும் அனைவரும், உண்மையில் இப்பேரினம் ஞானமும் அறிவாற்றலும் கொண்ட மக்களால் ஆனது என்பர். நாம் குரல் எழுப்பும் போதெல்லாம் நம் கடவுளாகிய ஆண்டவர் நம்மோடு உள்ளார். அவரைப் போல், மக்களுக்கு மிகவும் நெருங்கிய கடவுளைக்கொண்ட வேறு பேரினம் ஏதாகிலும் உண்டா? நான் இன்று நேர்மைமிகு சட்டங்களை உங்களுக்குத் தந்துள்ளேன். இவற்றைப் போன்ற நியமங்களையும் முறைமைகளையும் கொண்ட வேறுபேரினம் ஏதாகிலும் உண்டா? கவனமாய் இருங்கள் உங்கள் கண்களால் நீங்கள் கண்ட அனைத்தையும் மறந்து போகாதபடி உங்கள் இதயங்களில் காத்துக் கொள்ளுங்கள் உங்கள் வாழ்நாள் முழுமையும் நீங்கள் அவற்றை மறக்க வேண்டாம். உங்கள் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் அவற்றை எடுத்துக் கூறுங்கள்.

**பதில்பாடல் :** எருசலேமே ஆண்டவரைப் போற்றுவாயாக

**நற்செய்தி : மத்தேயு 5 : 17 - 19**

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது: ”திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ணவேண்டாம் அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். ”விண்ணும் மண்ணும் ஒழிந்து போகுமுன் திருச்சட்டம் யாவும் நிறைவேறும். அதன் ஒரு சிற்றெழுத்தோ ஒரு புள்ளியோ ஒழியாது என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். எனவே, இக்கட்டளை களில் மிகச்சிறியது ஒன்றையேனும் மீறி அவ்வாறே மக்களுக்கும் கற்பிக்கிறவர் விண்ணரசில் மிகச் சிறியவர் எனக் கருதப்படுவார். இவையனைத்தையும் கடைப்பிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர் எனக் கருதப்படுவார்“ என்றார்.

**தியானம் :** இன்று இவ்வுலகில் இடம்பெறும் சம்பவங்கள் எம்மை கலக்கத்திற்கு உள்ளாக்குகிறது. வயது வேறுபாடு இன்றிய பாலியல் கொடுமைகள், போதையின் பாவனை, மனக்கசப்புகளால், ஏமாற்றத்தால் தற்கொலைகள், மதத்திற்காக கொலைகள் என்று இப்பட்டியல் நீண்டு செல்கிறது. கடவுளின் குரலுக்கு செவிகொடுத்து, அதன்படி வாழ்வதே எமது கிறிஸ்த்தவ வாழ்வு. ஆனால் யார் இன்று அவ்வாறு வாழ்கிறார்கள்? இவ்வுலகின் மாயக் கவர்ச்சிகள் எம்மை அலைக்களிக்கின்றன. குறிப்பாக இன்றைய இளம் சமுதாயம் தமது மனம் போன போக்கில் வாழ்கிறார்கள். சமூக வலைத்தளங்களில் அதிக நேரம் செலவிடுகிறார்கள். குடும்ப உறவுகள், பிணைப்புகள் எல்லாம் அருகி வருகின்றன. இந்நிலையில் கடவுளின் கட்டளைப்படி வாழ்வது என்பது ஒரு சவாலே! புனித அன்னை தெரேசா தமது, செயலால், பணிவாழ்வால் அனைவரையும் கட்டி போட்டார். அவரை தெரியாதவர்களும் இல்லை, சந்திக்க விரும்பாத தலைவர்களும் இல்லை. இன்று திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை அனைவரையும் தமது அன்பால், செயலால் அரவணைத்து செல்வதை நாம் பார்க்கலாம். உலக தலைவர்கள் மத்தியில் அவர் மதிக்கப் படுகின்றவராத் திகழ்கிறார். எனவே எமது வாழ்வும், நாம் செய்யும் செயலும் எம்மை மற்றவர்களுக்கு யேசுவை அறிவிக்க வேண்டும். இத்தவக்காலத்தில் அதற்கான முயற்சியை நாம் மேற்கொள்வோம். அப்போது நாமும் விண்ணரசில் பெரியவர்களாக மாறலாம்.